# செயலாற்றுகை அறிக்கை-2014

## தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

## நிதி, திட்டமிடல் அமைச்சு

### தூர நோக்கு

அரசாங்க வளங்களின் வினைத்திறன் மிக்க ஒதுக்கீடு ஒன்றினூடாக சமூக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

### பணிக்கூற்று

அரச சேவைகளின் வினைத்திறன் கொண்ட நடவடிக்கை, அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கான வளங்களின் ஏற்பாடு மற்றும் விநியோகம் என்பவற்றை செய்வதற்கூடாக பொது நிதி முகாமைத்துவம் குறித்த சட்டவாக்கத்திற்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு உதவியளித்தல்.

## தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்

அ. தேசிய வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரித்தல்

- 03 வருட காலப்பகுதிக்கான நடுத்தரக் கால வரவு செலவுத்திட்ட வேலைச் சட்டகத்தினைத் தயாரித்தல்.
- அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசிறை இலக்குகளை அடைந்து கொள்வதற்கு செலவின முகவராண்மைகள் மற்றும் தொடர்புடைய திறைசேரி திணைக்களங்கள் என்பவற்றுடன் கலந்துரையாடி அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கான வருடாந்த வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரித்தல்.

ஆ. அரசாங்க செலவின முகாமைத்துவம்

- வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபங்களை வெளியிடல்.
- அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் வெளிப்படுத்தப்பட்ட நோக்கங்களுக்காக நிதி பயன்படுத்தப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒதுக்கீட்டு வரவு செலவுத் திட்ட முகாமைத்துவ நடவடிக்கைகளை செயற்படுத்துதல்.
- செலவினங்களின் பயன்பாட்டுத் தன்மையினை உறுதிப் படுத்துவதற்காக செலவின முகவராண்மைகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.
- நிதியியல் போன்ற பௌதிக முன்னேற்றங்களை கண்காணிப்பதற்கான செலவினங்களை பகுப்பாய்வு செய்தல்.
- அரசாங்க கணக்குகள் மீதான குழுவில் (COPA) தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினை பிரதிநிதித்துவப்படுத்துதல்.
- தொடர்புடைய அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் பற்றிய அவதானிப்புக்களைத் தயாரித்தல்.
- குத்தகை முறைமையில் உள்ளடங்காத வாகனங்கள் கொள்வனவுக்கான அங்கீகாரத்தினை வழங்குதல்.
- நிதியியல் குத்தகை முறைமையின் கீழ் அனைத்து அரசாங்க முகவராண்மைகளுக்கும் வாகனங்களைக் கொள்வனவு செய்தல்.
- சபைகள் மற்றும் குழுக்களில் திறைசேரி/தேசிய வரவு செலவுத் திட்டத்தினை பிரதிபலிக்கும் வகையில் அலுவலர்களின் பங்கு பற்றல்.
- திணைக்களத்தின் நிதி நிருவாகம்

இ. நியதிச் சட்ட சபைகளுடன் தொடர்பான செயற்பாடுகள் (வர்த்தகம் அல்லாத அரசாங்க நிறுவனங்கள்)

- திரட்டிய நிதியின் மூலம் ஒத்துழைப்பு வழங்கப்படும் நியதிச் சட்ட முகவர்களுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- பொது தொழில் முயற்சிகள் மீதான குழுவில் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினை பிரதிநிதித்துவப்படுத்துதல்.

ஈ. முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

- செலவிடும் முகவர்களுடன் கலந்துரையாடுவதன் பேரில் வர்த்தக, களஞ்சியங்களில் அரசாங்க அலுவலர்களுக்கானமுற்பணக் கணக்குகள் மீதான எல்லைகளை தீர்மானித்தலும் மீளாய்வு மீதான வேண்டுதல்களை வரையறுத்தலும்.

- முற்பணக் கணக்குகள் சார்ந்த விடயங்கள் பற்றிய பொதுக் கணக்குக் குழுக்கள் தொடர்பான கூட்டங்களில் திறைசேரி சார்பாக குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தல்

# உள்ளடக்கம்


| அத்தியாய இல. | | விடயம் | பக்கம் |
|---|---|---|---|
| **01.** | | **மேன்நோக்கு** | **01** |
| **02** | | **வரவு செலவுத்திட்ட மீளாய்வு மற்றும் செயற்படுத்துகை 2014** | **04** |
| | 2.1 | 2014 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டம் | 04 |
| | 2.2 | 2014 இற்கான வரவு செலவுச் செயலாற்றுகை | 05 |
| | 2.3 | 2014 – 2016 நடுத்தரக் கால வேலைச்சட்டகத்தில் 2014 வரவு செலவுத் திட்டத்தின் துறைரீதியான நோக்கு | 09 |
| | 2.4 | 2014 வரவு செலவுத்திட்ட முகாமை | 09 |
| | 2.4.1 | அரசாங்க கணக்குகள் என்ற வகையில் செலவினம் | 09 |
| | 2.4.2 | அரசாங்க செலவின முகாமை | 10 |
| | 2.4.2.1 | குறைநிரப்பு மதிப்பீடுகள் | 10 |
| | 2.4.2.2 | தி.நா. பொறுப்புக்களின் நிலைப்பாடு | 10 |
| | 2.4.3 | அர்ப்பணிப்புக் கட்டுப்பாடு | 11 |
| | 2.4.4 | வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருபங்களை வெளியிடுதல் | 11 |
| | 2.5 | முற்பணக் கணக்குகளின் கண்காணிப்பு | 12 |
| **03.** | | **2015 ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்** | **12** |
| | 3.1 | வரவு செலவுத்திட்ட தயாரிப்பு வழிகாட்டல் | 12 |
| **04.** | | **விசேட நடவடிக்கைகள்** | **12** |
| | 4.1 | இலாபமீட்டாத அரசாங்க தொழில் முயற்சிகளின் முகாமை | 12 |
| | 4.2 | அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் அவதானிப்புகள் | 13 |
| | 4.3 | ‘‘தேசத்திற்கு மகுடம்’’ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் -2014 | 13 |
| | 4.4 | வாகனக் கொள்வனவுகளுக்கான அங்கீகாரம் | 14 |
| | 4.4.1 | வாகனக் கொள்வனவுகளுக்கான வரவு செலவுத்திட்ட அங்கீகாரம் | 14 |
| | 4.4.2 | அரசாங்கத்துறைக்கான வாகனக் கொள்வனவு | 14 |
| | 4.5 | சபைகளிலும் குழுக்களிலும் பதவியினரின் பங்குபற்றுதல் | 15 |
| **05.** | | **தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு** | **15** |
| | 5.1 | பதவியணி | 15 |
| | 5.2 | மனித வள அபிவிருத்தி | 16 |
| | 5.2.1 | வெளிநாட்டு பயிற்சி / கருத்தரங்குகள் / மாநாடுகள் | 16 |
| | 5.2.2 | உள்நாட்டுப் பயிற்சி | 17 |
| | 5.3 | தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் நிதி நிருவாகம் | 17 |
| | 5.3.1 | முற்பனக்கணக்கு செயற்பாடுகள் | 18 |
| | 5.3.2 | 2014 ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் வினாக்கள் | 18 |

# 01. மேன்நோக்கு

தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் நிதி, திட்டமிடல் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் செயற்படுகின்றது. திணைக்களத்தின் பணியானது நடுத்தரக்கால செலவின வேலைச்சட்டகத்தின் துறை ரீதியான அடிப்படையில் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை உருவாக்குவதற்கான பொறுப்பு காணப்படுகிறது என்றவகையில் இது முழுமொத்த நடுத்தரக் கால பேரண்ட பொருளாதார வேலைச் சட்டகத்தினைக் (Medium Term Expenditure Framework) கொண்டுள்ளது. நடுத்தர செலவின வேலைச்சட்டகமானது அரசாங்கத்தின் செலவினத்தினை முகாமைசெய்வதற்கு குறிப்பிட்ட கவனத்தைச் செலுத்தும் நிதி திட்டங்களையும் துறைரீதியான கொள்கை உபாயங்களையும் கொண்டுள்ளது. இச்செயன்முறையானது நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்கத்தின் நியதிச் சட்ட முகவர்கள் மற்றும் திறைசேரி திணைக்களங்கள் என்பவற்றுடன் தொடர்ந்தேர்ச்சியான உசாவுகையினைக் கொண்டுள்ளது.

இத்திணைக்களத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் செயலாற்றுகையானது அமைச்சின் நிதி மற்றும் திட்டமிடல் என்ற விரிந்த நோக்கெல்லையினை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன், தேசிய வரவுசெலவு திட்டத் திணைக்களத்தின் பொதுவான ஆணையினையும் பிரதிபலிக்கின்றது. 2014 ஆம் ஆண்டில் இத் திணைக்களம் 2015 வரவு செலவுத் திட்டம் தயாரித்தல் 2014 வரவு செலவுத் திட்டத்தினை செயற்படுத்தல் மற்றும் நடுத்தரக்கால செலவின வேலைச்சட்டகம் 2015 - 2017 போன்ற செயற்பாடுகளினை கீழே அட்டவணை 1.1 இல் குறிப்பிடப்பட்டவாறு செயற்படுத்தியது.

**அட்டவணை 1.1 2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகை சுருக்கம்**

| தொழிற்பாடு | நடவடிக்கை | பொதுவான இலக்கு | அடைவு |
|---|---|---|---|
| 1. 2014 ஆம் ஆண்டு தேசிய வரவு செலவுத் திட்டத்தையும் செலவின முகாமையையும் செயற்படுத்துதல் | • செலவின முகாமைத்துவம் தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்கும் வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கைகளை வெளியிடுதல்<br><br>• எதிர்பாராத செலவினங்களுக்கான மேலதிக நிதி ஏற்பாடு மற்றும் பாராளுமன்றத்திற்கு குறைநிரப்பு மதிப்பீடுகளை சமர்ப்பித்தல்<br><br>நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் கீழ் நிதி மாற்றல்களுக்கு அதிகாரமளித்தல் | • அரசாங்க செலவினத்தினை வினைத்திறன் மிக்கதாக முகாமை செய்தல்.<br><br>• எதிர்பாராத செலவினங் களுக்காக நிதி ஏற்பாடு செய்தல்<br><br>• அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுள் செலவினங்களைப் பேணுதல் | • இது தொடர்பில் 157 மற்றும் 157 (I) ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைகளை வெளியிடுதல்.<br><br>• வெள்ளம், வரட்சி போன்ற எதிர்பாராத நிகழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கான விஷேட தேவைப்பாடுகளுக்கான மேலதிக நிதி பாராளுமன்றத்தில் மதிப்பீடாக சமர்ப்பிக்காது அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லைக்குள் மீள் ஒதுக்கீட்டினை முகாமை செய்தல்.<br><br>• நிதிப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 1,589 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு அவற்றுள் 242 விண்ணப்பங்கள் நிகழ்ச்சித்திட்ட மாற்றல் களாகவும் 1,347 கருத்திட்ட மாற்றல்களாகவும் காணப்பட்டன. |

| தொழிற்பாடு | நடவடிக்கை | பொதுவான இலக்கு | அடைவு |
|---|---|---|---|
| 2. 2015 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவுத் திட்டத்தினைத் தயாரித்தல் | • வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல் தொடர்பான வரவு செலவுத்திட்ட வழிகாட்டல்களை வழங்குதல்.<br><br>• செலவின முகவராண்மைகள் மற்றும் தொடர்புடைய திறைசேரி திணைக்களங்கள் என்பவற்றுடன் கலந்துரையாடி வரைவு வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்<br><br>• தொடர்புடைய அமைச்சுக்களுடன் வரவு செலவுத் திட்ட கலந்துரையாடல்களை நடாத்துதல் | • வரவு செலவுத் திட்டம் தயாரித்தல் தொடர்பான வழிகாட்டல் கொண்ட தனித்தனியான கடிதங்களை தொடர்படைய நிரல் அமைச்சுக்களுக்கு வழங்குதல்.<br><br>• அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை வேலைச்சட்டகம்; எதிர்கால தூர நோக்கில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதை உறுதிப் படுத்தல்.<br><br>• உண்மையான தேவைகளை நிறைவேற்றி யதார்த்தவரவு செலவுத்திட்டம் ஒன்றினைத் தயாரித்தல் | • 2015 - 2017 நடுத்தர கால அரசாங்க அபிவிருத்திக் கொள்கை வேலைச்சட்டகத்துள் 2015 வரவு செலவுத்திட்டத்திற்கான செலவினத்தினை தயாரித்தல்.<br><br>• அதிமேதகு சனாதிபதியின் தலைமையில் தெரிவுசெய்யப்பட்ட அமைச்சுக்களுக்கான ஆரம்ப வரவு செலவுத்திட்ட கூட்டங்கள் நடாத்தப்பட்டன<br><br>• தொடர்புடைய அமைச்சுக்களின் அமைச்சர்களின் தலைமையில் கூட்டங்களை நடாத்துதல்<br><br>• திறைசேரிச் செயலாளர், பிரதிச் செயலாளர்களுடன் தொடர்புடைய திணைக்களங்கள்/ முகவர்களுடனும் மீளாய்வுக் கூட்டங்களை நடடத்துதல் |
| | • குறித்த நேரத்தில் 2015 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைளை எடுத்தல். | • ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2014 ஒக்தோபர் முதலாவது வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். | • 2015 கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2014.09.19 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. |
| | | • விபரமான மதிப்பீடுகளைத் தயாரித்தல் | • தொடர்புடைய சகல செலவினத் தலைப்புகளையும் கவனத்திற் கொண்டு பின்னணி விபரங்களுடன் விபரமான அச்சிடப்பட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல் |

| தொழிற்பாடு | நடவடிக்கை | பொதுவான இலக்கு | அடைவு |
|---|---|---|---|
| | | • ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான அங்கீகாரத்தினை பாராளுமன்றத்தின் மூலம் பெற்றுக்கொள்ளல். | • 2014.09.26 ஆம் திகதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. |
| | | | • 2014.10.24 இல் வரவு செலவுத்திட்டம் (இரண்டாவது வாசிப்பு) பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது.<br><br>• 2014.11.24இல் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினை பாராளுமன்றம் நிறைவேற்றியது.<br><br>• 2014.11.24 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களினால் 2014 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் சான்றுபடுத்தப்பட்டது.<br><br>• 2014.12.04 ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற வகையில் அதிமேதகு சனாதிபதியால் ஆணைப்பத்திரம் விநியோகிக்கப்பட்டது |
| 3. அமைச்சரவை விஞ்ஞாபனம் மீதான அவதானிப்புகளை சமர்ப்பித்தல் | • அரசாங்கம், துறைரீதியான கொள்கை மற்றும் செலவினத்தின் பகுப்பாய்வினை உரிய நேரத்தில் அமைச்ரவை விஞ்ஞாபனத்தின் கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகளை சமர்ப்பித்தல் | • அமைச்சரவை விஞ்ஞாபனம் மீது அவ்வப்போது அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டது | • அமைச்சரவை விஞ்ஞாபனம் மீது அவ்வப்போது அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டது |
| 4. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்கள உள்ளக முகாமை | • பொது நிருவாகம் | • திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மனிதவளப் பயன்பாட்டையும் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளையும் வினைத் திறன்மிக்கதாக பயன் படுத்துவதனை உறுதிப் படுத்துதல் | • ஒதுக்கீட்டில் ரூபா 2,613.1 மில்லியன் பயன்படுத்தப்பட்டது . அதாவது மீண்டெழும் செலவினம் 965.1 மில்லியன் மூலதனச் செலவினம் 1,648 மில். |

| தொழிற்பாடு | நடவடிக்கை | பொதுவான இலக்கு | அடைவு |
|---|---|---|---|
| | • திணைக்கள முற்பணக் கணக்குகளின் கட்டுப்பாடு | • திணைக்கள முற்பணக் கணக்கு வரையறைகளுக்கு இணங்க தேசிய வரவு செலவுத் திட்டத்திணைக்கள அலுவலர்களின் அனைத்து விண்ணப் பங்களுக்கும் கடன்/ கடன் மானியம் வழங்கப்பட்டது. | • அதிகாரமளிக்கப்பட்ட எல்லைகள் கடைப் பிடித்து, அலுவலர்களுக்கு இடர் கடன், சைக்கிள் கடன், விஷேட முற்பணம், விழா முற்பணம் ரூபா 3,556,270 வழங்கப்பட்டுள்ளது. |
| | • திறன் விருத்தி<br><br>• அறிக்கைகளை சமர்ப்பித்தல்<br><br>• கணக்காய்வு வினாக்களுக்கான விடைகள் | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி ஊடாக மனிதவள அபிவிருத்தி<br><br>• இறுதித் தினத்திற்கு முன் பின்வரும் அறிக்கைகளின் சமர்ப்பிப்பு:<br>(அ) செயலாற்றுகை அறிக்கை<br>(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு<br>(இ) 2014 அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்கிணக்கம்<br><br>• கணக்காய்வு வினாக்களை குறைத்தல்<br>• அரசாங்க கணக்குகள் மீதான குழுவில் பங்குபற்றுதல் | • தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்கள செயற்பாடுகள் தொடர்பில் 03 அலுவலர்கள் வெளி நாட்டு பயிற்சிக்கு அனுப்பப்பட்டதுடன் 04 அலுவலர்கள் உள் நாட்டு பயிற்சி பெற்றுள்ளனர்.<br><br>• பின்வரும் அறிக்கைகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.<br>(அ) செயலாற்றுகை அறிக்கை 2013<br>(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு 2014<br>(இ) அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்கு இணக்கக் கூற்று<br><br>• கணக்காய்வாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட அனைத்துக் கணக்காய்வு வினாக்களுக்கும் (07) விடை அளிக்கப்பட்டுள்ளன |

## 2. 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவத் திட்ட மீளாய்வு மற்றும் செயற்படுத்துகை

### 2.1 2014 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டம்

2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரகாரம், 2014 ஆம் ஆண்டுக்கான முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் உட்பட மதிப்பிடப்பட்டுள்ள அரசாங்கத்தின் மொத்தச் செலவினம் ரூபா 2,603 பில்லியனாகவும் உயர்ந்த பட்சக் கடன் பெறும் எல்லை ரூபா 1,278 பில்லியனாகவும் இருந்தது. அரசாங்கத்தின் மொத்தச் செலவினம் பினவருமாறு விபரமாகத் தரப்பட்டுள்ளது.

- அரசாங்கத்தின் பொதுச் சேவைகள் சார்ந்த செலவினம் ரூபா. 1,598 பில்.
- விசேட சட்டங்களின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டதும் திரட்டிய நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டியதுமான அரசாங்கத்தின் செலவினம் ரூபா. 1,001 பில்.
- முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் சார்ந்த செலவினம் ரூபா. 4.0 பில்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு வசதியளிக்கும் வகையில் 2013 இன் 36 ஆம் இலக்க ஒதக்கீட்டுச் சட்டம் 2014 நவம்பர் 25 ஆந் திகதி திருத்தப்பட்டது. இதற்கமைவாக, அட்டவணை 01 இல் அங்கீகரிக்கப்பட்ட செலவின வரையறையினை ரூபா 1,598 பில்லியனிலிருந்து ரூபா 1,693 பில்லியனாக அதிகரிப்பதற்காக ரூபா 95 பில்லியன் கவனத்திற் கொள்ளப்பட்டது. விஷேட சட்டங்களின் கீழான செலவினம் ரூபா 1,001 பில்லியனிலிருந்து ரூபா 1,058 பில்லியனாக அதிகரித்ததுடன் அதிகரித்த படுகடன் சேவைச் செலவினம் உரப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசாங்க படுகடன் படுகடன் வரையறை ரூபா 1,278 பில்லியனிலிருந்து ரூபா 1,478 பில்லியனாக அதிகரிப்பதற்கு ரூபா 200 பில்லியனால் திருத்தப்பட்டது. இதற்கமைவாக, மேற்குறித்த மாற்றங்களை உள்ளடக்கிய 2014 இன் 47 ஆம் இலக்க ஒதுக்ககீட்டு (திருத்தச்) சட்டம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.

## 2.2. 2014 ஆம் ஆண்டுக்கானவரவு செலவுத் திட்டத்தின் செயலாற்றுகை

கருத்திட்டங்களின் நியதிகளின் மூலமும் நிதியளிப்பு மூலங்களுடன் செலவு விடயத்தின் மூலமும் ஒன்றுதிரட்டப்படாத தலைப்பு ரீதியான செலவினங்கள்,வரவு செலவுத் திட்ட உரையுடன் அச்சிடப்பட்ட மதிப்பீடுகளில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஒதுக்கீட்டுச் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டதும் நிதி அமைச்சர் அவர்கள் அச்சிடப்பட்ட மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவினத்தைச் செய்வதற்கு அதிகாரமளிக்கும் அனுமதியை வழங்கினார். 2014 ஆம் ஆண்டுக்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் 208 செலவினத் தலைப்புகளில்/ செலவின அலகுகளுக்கிடையே ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அது 22 விசேட செலவின அலகுகளையும், 60 அமைச்சுக்களையும், 126 திணைக்களங்களையும் உள்ளடக்கியிருந்தது.

2014 ஆம் ஆண்டுக்காக பதிவுசெய்யப்பட்டுள்ள மொத்தச் செலவினம் ரூபா 2,603 பில்லியன் ஆகும். அதில் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட செலவினம் ரூபா 1,529 பில்லியன் அல்லது 59 சதவீதமாகும். விஷேட சட்ட சேவைகளின் கீழ் செலவினமாக மீதி ரூபா 1,073 பில்லியன் அல்லது 41 சதவீதமாகக் காணப்பட்டது.

2014 ஆம் ஆண்டுக்காக பதிவுசெய்யப்பட்ட மொத்த செலவினத்தில், அரசாங்க பொதுச் சேவைகள் தொடர்பான உண்மையான செலவினம் ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டத்தின் முதலாவது அட்வணையின் கீழ் ரூபா 1,529 பில்லியனாகக் காணப்பட்டதுடன், 2013 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 இல் ரூபா 272 பில்லியனாக அல்லது 22 சதவீதமாக அதிகரித்தது. மின்சாரம், நீர், காகிதாதிகள், எரிபொருள், உணவு, சீருடைகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான செலவினங்கள், சம்பளங்கள் மற்றும் சம்பளங்கள், நலன்புரி போன்ற மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்கள் ஆகிய இரண்டினையும் உள்ளடக்கியுள்ளது. விஷேட சட்ட சேவைகளின் கீழ் உண்மையான செலவினம் ரூபா 1,073 பில்லியனாகும். எவ்வாறாயினும், மொத்த உள்நாட்டு படுகடனில் குறுகிய கால படுகடன் பங்கினைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதினால் விஷேட சட்ட ஏற்பாடுகளின் கீழ் மொத்த பயன்படுத்தப்படாத ஏற்பாடு 2013 இல் ரூபா 1,155 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014 இல் ரூபா 82 பில்லியனாக அல்லது 7 சதவீதமாகக் குறைவடைந்தது. முற்பனக் கணக்கு செயற்பாடுகளின் உண்மையான செலவினம் ஆகக்கூடிய செலவின வரையறையான ரூபா 18.1 பில்லியனுக்கு எதிராக ரூபா 16.6 பில்லியானக் காணப்பட்டதுடன், ஆகக்குறைந்த பெறுகையான ரூபா 14.1 பில்லியனுக்கு எதிராக ரூபா 15.5 பில்லியனாக மொத்த பெறுகை காணப்பட்டது. இதற்கமைவாக, முற்பன் கணக்குச் செயற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் காணப்பட்டன.

அட்டவணை 2.1 நிதி ஏற்பாடுகளின் பயன்பாட்டின் முன்னேற்றம் - 2014

ரூபா மில்

| அமைச்சின் / செலசினவிடயத்தின் பெயர் | மதிப்பீடுசெய்யப்பட்ட ஏற்பாடுகள் | தி. நா. செலவு விடயத்திலிருந்து மேலதிக ஒதுக்கீட்டுக்காக ஏற்பாடு செய்தல் | மொத்த ஏற்பாடுகள் (கூட்டுதொகை (1)+(2)) | மெய் செலவினம் | பயன்படுத்தப்படாத ஏற்பாடு (3)-(4) |
|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| விசேட செலவிடும் அலகுகள் | 18,297 | 163 | 18,461 | 17,181 | 1,280 |
| புத்தசாசன மற்றும் சமய அலுவலர்கள் | 2,000 | 5 | 2,005 | 1,942 | 63 |
| நிதி, திட்டமிடல் | 42,317 | 9,311 | 51,628 | 46,549 | 5,079 |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி | 283,763 | 1,907 | 285,670 | 274,723 | 10,947 |
| பொருளாதார அபிவிருத்தி | 98,988 | 8,898 | 107,886 | 107,667 | 219 |
| ஆனர்த்த முகாமைத்துவம் | 4,249 | 297 | 4,546 | 4,310 | 236 |
| தபால் சேவைகள் | 9,986 | 100 | 10,086 | 9,993 | 93 |
| நீதித்துறை | 6,307 | 3 | 6,310 | 5,966 | 344 |
| சுகாதாரம் | 117,162 | - | 117,162 | 112,122 | 5,040 |
| வேளிநாட்டு அலுவல்கள் | 9,823 | 240 | 10,063 | 9,770 | 294 |
| போக்குவரத்து | 80,381 | 753 | 81,134 | 76,337 | 4,797 |
| பெற்றோலியக் கைத்தொழில் | 163 | 4 | 168 | 163 | 5 |
| கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகம் | 1,916 | 79 | 1,995 | 1,774 | 221 |
| நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் கப்பற்றொழில் | 144,258 | 7 | 144,265 | 133,304 | 10,962 |
| விவசாயம் | 40,956 | 50 | 41,005 | 37,758 | 3,247 |
| மின்வலு சக்தி | 32,300 | 11 | 32,311 | 24,287 | 8,025 |
| சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரம் | 2,277 | 3 | 2,280 | 2,080 | 200 |
| பொது நிருவாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் | 165,559 | 1,199 | 166,758 | 164,575 | 2,183 |
| வெகுசன ஊடகம் மற்றும் தகவல் | 3,399 | 18 | 3,417 | 3,137 | 280 |
| நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப் மற்றும் பொது வசதிகள் | 5,308 | 2 | 5,310 | 3,964 | 1,346 |
| சமூக சேவைகள் | 4,503 | - | 4,503 | 4,418 | 85 |
| கல்வி | 43,134 | 913 | 44,046 | 43,511 | 536 |
| தொழில் மற்றும் தொழில் உறவுகள் | 1,741 | 35 | 1,777 | 1,670 | 107 |
| பாரம்பரியக் கைத்தொழில் சிறிய தொழில் முயற்சி அபிவிருத்தி | 1,126 | 5 | 1,131 | 1,117 | 14 |
| உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் | 228,791 | 1,783 | 30,574 | 164,223 | 66,351 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தொழில்நுட்பம் மற்றும் ஆய்வு | 3,913 | 4 | 3,917 | 3,656 | 261 |
| தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு | 576 | - | 576 | 479 | 97 |
| பெருந்தோட்டக் கைத்தொழில் | 4,255 | 21 | 4,277 | 3,915 | 362 |
| விளையாட்டுத்துறை | 3,464 | - | 3,464 | 2,423 | 1,042 |
| சுதேச மருத்துவம் | 1,815 | 53 | 1,869 | 1,628 | 241 |
| மீன்பிடி மற்றும் நீரியல்வள அபிவிருத்தி | 9,338 | 78 | 9,416 | 8,069 | 1,347 |
| கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி | 5,689 | 100 | 5,789 | 5,439 | 351 |
| தேசிய மரபுரிமை | 1,571 | 14 | 1,584 | 1,510 | 74 |
| பாராளுமன்ற அலுவல்கள் | 443 | 8 | 451 | 428 | 23 |
| மீள் குடியேற்றம் | 403 | - | 403 | 398 | 5 |
| கைத்தொழில் மற்றும் வணிகம் | 3,217 | - | 3,217 | 2,963 | 254 |
| நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவம் | 49,884 | 237 | 50,120 | 44,942 | 5,178 |
| காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி | 5,937 | 214 | 6,151 | 6,025 | 125 |
| இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி | 10,082 | - | 10,082 | 9,043 | 1,039 |
| சுற்றாடல் | 4,272 | 32 | 4,304 | 3,497 | 807 |
| நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு | 30,814 | 2 | 30,816 | 27,249 | 3,567 |
| உயர்கல்வி | 39,513 | 451 | 39,964 | 38,747 | 1,218 |
| பொது முகாமைத்துவ மறுசீரமைப்பு | 240 | - | 240 | 214 | 25 |
| புனர்வாழ்வுசிறைச்சாலைகள் மறுசீரமைப்பு | 6,853 | - | 6,853 | 6,590 | 263 |
| அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி | 475 | 945 | 1,419 | 1,394 | 25 |
| விமானப் போக்குவரத்து | 26,791 | - | 26,791 | 26,614 | 177 |
| கலாசாரம் மற்றும் கலைகள் | 1,914 | - | 1,914 | 1,556 | 358 |
| தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி | 1,942 | - | 1,942 | 1,718 | 224 |
| கமத்தொழில் சேவைகள் மற்றும் வன சீவராசிகள் | 1,541 | 28 | 1,569 | 1,344 | 226 |
| சிறு ஏற்றுமதிப் பயிர் ஊக்குவிப்பு | 1,031 | 4 | 1,035 | 929 | 106 |
| வினைத்திறன் மேம்பாடு | 804 | 1 | 804 | 742 | 63 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி | 673 | - | 673 | 642 | 31 |
| மக்கள் தொடர்பு மற்றும் பொது விவகாரம் | 377 | - | 377 | 335 | 41 |
| தனியார் போக்குவரத்துச் சேவைகள் | 769 | 6 | 775 | 763 | 12 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம் | 1,718 | - | 1,718 | 1,135 | 583 |
| சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி | 267 | - | 267 | 229 | 38 |
| முதலீட்டு ஊக்குவிப்பு | 174 | - | 174 | 142 | 32 |
| தாவரவியற் பூங்கா மற்றும் பொது பொழுதுபோக்கு வசதிகள் | 1,534 | 17 | 1,551 | 1,180 | 370 |
| கல்விச் சேவைகள் | 8,524 | 2 | 8,526 | 8,306 | 221 |
| சட்டம் மற்றும் ஒழுங்கு | 53,244 | 241 | 53,485 | 52,611 | 874 |
| **படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்** | **1,089,862** | **16,039*** | **1,105,901** | **1,082,330** | **23,571** |
| **திறைசேரி நானாவித தலைப்பு (தி.நா.த)** | **28,375** | **(28,245)** | **130** | **-** | **130** |
| **முழு மொத்தம்** | **2,751,000** | **16,039** | **2,767,039** | **2,601,723** | **165,316** |

*** நிதி ஏற்பாடுகள் குறை நிரப்பு ஒதுக்கீட்டிலிருந்து வழங்கப்பட்டன**

**மூலம் : தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் /அரச கணக்குகள் திணைக்களம்**

## 2.3 நடுத்தர கால செலவின வேலைச் சட்டகத்தில் 2014 வரவு செலவுத்திட்டத்தின் துறைரீதியான நோக்கு 2014-2016

2014 வரவு செலவுத்திட்டம் பிரதாகமாக மஹிந்த சிந்தனை, தூர நோக்கு, அபிவிருத்திக்கான வேலைச்சட்டகம் மற்றும் அதில் அடையாளங்காணப்பட்ட உபாயங்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டது. இலங்கையினை ஆசியாவின் வளர்ந்துவரும் அதிசயமொன்றாக மாற்றும் அரசாங்கத்தின் பொறுப்புடமையின் மீது பாரிய கவனம் செலுத்தும் வகையில் இது மாற்றப்பட்டிருந்தது. 2014 வரவு செலவுத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துகையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்வரும் செயற்பாடுகள் பிரயோகிக்கப்பட்டன.

(அ) துறை அடிப்படை – 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் அடுத்த 3 வருடங்களுக்கு அந்தந்த துறைக்கான அக்கறை செலுத்துநர்களினால் தயாரிக்கப்பட்ட துறை ரீதியான கொள்கை வேலைச்சட்டகத்துடன் இணங்கியதாகக் காணப்பட்டது.

(ஆ) யதார்த்த மதிப்பீடு – 2014 வரவு செலவுத்திட்டமானது அரசியலமைப்பின் உறுப்புரை 150(2) மற்றும் உறுப்புரை 150(3) என்பவற்றின் நியதிகளுக்கமைவாக ஏற்பாடு செய்யப்பட்ட வரையறைகளின் கீழ் செய்யப்பட்ட உண்மையான செலவின மதிப்பீடொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகும்.

(இ) செயலாற்றுகை அல்லாத கருத்திட்டங்கள்- பல வருடங்களாக மதிப்பீடு களில் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய கருத்திட்டங்கள் அனைத்தும் மீள் உருவாக்கப்படுதல் அல்லது விட்டுவிடல்.

(ஈ) பிரதிபண்ணல் அல்லது மேலமைவு என்பவற்றினைத் தவிர்த்தல்- செலவின முகவராண்மைகள் மற்றும் மாகாண சபைகள் துறை ரீதியான ஒதுக்கீடுகள், கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படும் ஒரே வகையான செயற்பாடுகளுக்கு முறையாகப் பகிரப்படுகிறது என்பதை உறுதிப்படுத்தல்.

இந்தத் துறை ரீதியான செயன்முறைகளுக்கு வசதியளிக்கும் வகையில் சமூகப் பாதுகாப்பு, மனிதவள அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மெய்ப் பொருளாதாரம், சுற்றாடல், ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பம், அரசாங்க சேவை வழங்கல், பாதுகாப்பு மற்றும் சட்ட அமுல்படுத்துகை போன்ற ஒன்பது துறைகளின் கீழ் அனைத்து அமைச்சுக்களும் திணைக்களங்கள் மற்றும் பிற செலவின முகவராண்மைகளும் வகைப்படுத்தப்பட்டன. இதற்கமைவாக தாம் பெற்றுக்கொண்ட செயற்பாடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு செலவின முகவராண்மையும் மேற்குறிப்பிட்ட ஒன்று அல்லது கனிசமான துறைகளில் இடம்பெற்றன.

## 2.4 2014 வரவு செலவுத்திட்டத்தின் முகாமை

### 2.4.1 அரசாங்க கணக்குகளின் பிரகாரம் வருமானமும் செலவினமும்

2014 ஆம் ஆண்டில் பதிவாகிய ரூபா 2,602 பில்லியன் அரசாங்க செலவினம் முன்னைய வருடத்திலும் பார்க்க 52.6 சதவீத அல்லது ரூபா 1,370 பில்லியன் அதிகரிப்பாகும். ரூபா 596 பில்லியன் வரையிலான மொத்த மூலதனச் செலவினம் 22.9 சதவீதத்தினால் அதிகரித்தது. அரசாங்க படுகடன் வளர்ச்சி 2014 இல் 24.2 சதவீதமாக அல்லது 636 பில்லியனாகக் காணப்பட்டது. அரசாங்க மொத்தச் செலவினம் 2013 இல் ரூபா 2,412 பில்லியனிலிருந்து 2014 இல் ரூபா 190 பில்லினாக அல்லது 7.8 சதவீதத்தினால் அதிகரித்தது. எவ்வாறாயினும், 2014 இல் மொத்த செலவினம் அவ்வருடத்திற்கான உண்மையான மதிப்பீடான ரூபா 2,751 பில்லியனைவிட குறைவாகக் காணப்பட்டது. மீண்டெழும் செலவினம் முன்னைய வருடத்தினைவிட 9.2 சதவீதம் அல்லது ரூபா 116 பில்லியனாக அதிகரித்தது. அரசாங்கத்தின் உண்மையான மீண்டெழும் ரூபா 1,370 பில்லியனாகக் காணப்பட்டதுடன் 2014 இற்கான வரவு செலவு மதிப்பீடான ரூபா 1,440.8 பில்லியனைவிட சிறிதளவு குறைவாகும்.

### 2.4.2 அரசாங்க செலவின முகாமை

2014 வரவுசெலவுத்திட்ட தொழிற்பாடுகள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட செலவின வரையறைக்குள் முகாமை செய்யப்பட்டதுடன், நடுத்தரக்கால செலவின வேலைச்சட்டகத்தின் 2014 – 2016 இலக்குகளை அடைவதனை உறுதிப்படுத்துவதாக அமைந்தது.

திறைசேரி, திறைசேரி ஆதரவு சேவைகள் மற்றும் பின்னிகழும் கடன் பொறுப்புக்கள் (திறைசேரி நானாவித செலவினம்) ஆகியவற்றினால் விவேகமுள்ள அரசாங்க செலவின முகாமைத்துவத்திற்காக வருட காலப் பகுதியில் எதிர்பாராத பல்வேறு அவசரத் தேவைகளை முகாமை செய்வதற்கு குறைநிரப்பு வரவு செலவைத் தவிர்ப்பதற்கான பிரதான ஒரு கருவியாகும்.

#### 2.4.2.1 குறைநிரப்பு மதிப்பீடுகள்

எழுந்தமாறான குறைநிரப்பு வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தவிர்க்கும் அதேவேளை, எதிர்பாராத அவசர தேவைப்பாடுகளுக்கு நிதி ஏற்பாடு செய்யும் வகையில் 2014 இல் அரசாங்க செலவினத்தினை திறனாக முகாமை செய்வதற்கான சாதனமொன்று என்ற வகையில் வரவுசெலவுத்திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் நானாவித பொறுப்புக்கள் (திறைசேரி நானாவித செலவினத் தலைப்பு) திறைசேரியினால் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டது. நாட்டில் சாதகமான அரசிறை சூழல் ஒன்றினை மேம்படுத்தும் வகையில் முற்பண ஏற்பாடுகள் என்றவகையில் அரசாங்க செலவினம் மற்றும் வரவுசெலவுப் பற்றாக்குறை அத்துடன் ஏனைய அரசிறை இலக்குகளில் வரலாற்று ரீதியான போக்கினைக் கருத்திற் கொண்டு வரவுசெலவுத்திட்ட தயாரிப்புச் செயன்முறைகளின் போது இச்சாதனத்ததிற்காக சராசரியான தொகையொன்றினை திறைசேரி ஒதுக்கீடு செய்துள்ளது.

**அட்டவணை 2.2 மூலதனச் செலவினங்களுக்கான குறைநிரப்பு ஏற்பாடுகள்-2014**

| பிரதான துறை | ரூபா மில். |
|---|---|
| பாதை மற்றும் பெருந்தெருக்கள் | 7,240 |
| நீர்ப்பாசனம் | 307 |
| கல்வி | 5,418 |
| தேசத்திற்கு மகுடம் பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 3,306 |
| நகர அபிவிருத்தி | 6,429 |
| பாதுகாப்பு | 1,725 |
| விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்தி | 6,823 |
| நலன்புரி | 3,150 |
| உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை | 3,654 |
| அலுவலகக் கட்டிடம் மற்றும் ஏனைய நிர்மாணம் | 3,845 |
| புனரமைப்பு மற்றும் கொள்வனவு | 7,401 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 360 |
| வாகனக் கொள்வனவு | 1,741 |
| ஏனைய | 7,087 |
| **மொத்தம்** | **58,486** |

*மூலம்: தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்*

#### 2.4.2.2 தி. நா. பொறுப்புக்களின் நிலைப்பாடு

2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் நானாவித பொறுப்புக்களின் மொத்த மதிப்பீடு ரூபா 90.19 பில்லியனாக காணப்பட்டதுடன் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டதுடன் அவற்றுள் ரூபா 41.30 பில்லியன் மீண்டெழும் செலவினமாகவும் ரூபா 48.89 பில்லியன் மூலதனச் செலவினமாகவும் காணப்பட்டது.

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரியின் நானாவித பொறுப்புக்களின் செலவு விடயத்தினூடாக வழங்கப்பட்ட மேலதிக ஏற்பாடுகளின் தொகையான ரூபா 87.81 பில்லியன் செலவினத் தலைப்புகளுக்கு மாற்றப்பட்டன. அதில் ரூபா 29.33 பில்லியன் மீண்டுவரும் செலவினமாகவும் ரூபா 58.49 பில்லியன் மூலதனச் செலவினமாகவும் இருந்தது.

### 2.4.3 பொறுப்புக் கட்டுப்பாடு

பல்வேறு செலவின முகவர்களினால் போதிய ஏற்பாடுகளின்றி மேற்கொள்ளப்படும் கடப்பாடுகளை முகாமைசெய்வதற்கும் அத்தகைய பொறுப்புக்கள் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளுக்குள் உள்ளடக்கப்படவேண்டும் என்பதற்குமான வழிகாட்டல்களை திறைசேரி வெளியிட்டுள்ளது. ஏற்கனவே பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நடுத்தர கால வரவு செலவு திட்ட வேலைச்சட்டகத்திற்குள் முடியுமான அளவு தொழிற்படுவதற்கு ஊக்குவிக்கப்படுகிறது. 2014 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிற்குள் செலவின முகவர்கள் அனைத்தும் செயற்படுவதற்கு வேண்டும் 2014.01.01 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தினை வெளியிட்டதன் மூலம் மேலும் விரிவு படுத்தப்பட்டது.

மேலும், 2015 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள் தொடர்பாக 2014.08.18 ஆந் திகதிய 03/2014 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தினை வெளியிட்டதன் மூலம் பொறுப்புக்கட்டுப்பாடு பற்றிய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. இதற்கமைவாக, பொறுப்புக்கள் அனைத்தும் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்டத்திற்குள் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு முறையான திட்டமொன்றினை உருவாக்குமாறு அனைத்து கணக்கீட்டு அலுவலர்களுக்கும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

### 2.4.4 வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கைகளை வெளியிடுதல்

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டதுடன் இவற்றின் மூலம் செலவின முகவராண்மைகளின் செலவின வழிகாட்டல்களை வழங்கக் கூடியதாக இருக்கின்றது.

**அட்டவணை 2.3: வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கைகளை வெளியிடுதல்**

| திகதி | சுற்றறிக்கை இல. | தலைப்பு |
|---|---|---|
| **01.01.2014** | 1/2014 | 2014 இற்கான செலவினத்தினை மேற்கொள்வதற்கான அதிகாரமளித்தல் மற்றும் அரசாங்க செலவின முகாமை. |
| **23.07.2014** | 2/2014 | 2014 வரவு செலவுத்திட்டத்தினைச் செயற்படுத்தும் வகையில் அரசாங்கத் துறையிலுள்ள கள அலுவலர்களுக்கு மோட்டார் சைக்கில்களை வழங்குதல். |
| **18.08.2014** | 3/2014 | 2015 வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள். |
| **04.12.2014** | 4/2014 | 2014 வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின் திருத்ததங்களுக்குள் செலவினத்தினை மேற்கொள்ளுதல். |
| **26.12.2014** | 152(II) | அவசர அனர்த்த நிலைமைகளில் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டி எழுப்புவதற்கான ஏற்பாடுகளுக்கான வழிகாட்டல். |
| **29.12.2014** | 152(III) | அனர்த்த நிலைமையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் வழங்குவதற்கான விசேட சுற்றுநிருபம். |
| **30.12.2014** | 5/2014 | 2015 இற்கான செலவினத்தினை மேற்கொள்தல் மற்றும் அரசாங்க செலவின முகாமைத்துவத்திற்கு அதிகாரமளித்தல். |

*மூலம் : தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்*

## 2.5 முற்பணக் கணக்குகளின் கண்காணிப்பு

வழமை போன்று 2014 ஆம் ஆண்டிலும் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்ய முடியுமாக இருந்தது. 207 அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள், 4 வர்த்தக முற்பணக் கணக்குகள் 3 களஞ்சிய முற்பணக் கணக்குகள் மற்றும் 4 விசேட முற்பணக் கணக்குகள் உள்ளடங்களாக முற்பணக் கணக்குகளின் தொழிற்பாடுகளுக்கு ரூபா 18,105 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. முற்பணக் கணக்கு எல்லைகளைத் தீர்மானித்தல், இவ்வெல்லைகளின் திருத்தக் கண்காணிப்பு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் தொடர்பான பின்னூட்டல் செயற்பாடுகள் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டன. 2014 ஆம் ஆண்டின் போது 31 கணக்குகள் அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகளாக இருந்ததுடன் 05 கணக்குகள் ஏனையவையாகவும் இருந்தன. முற்பணக் கணக்குகளின் எல்லைகளுடன் இணக்கப்பாடின்மை, விஸ்தரிப்புச் செயற்பாட்டின் முன்னேற்றம் மற்றும் வர்த்தகம் விஸ்தரிப்புச் செய்யப்பட்ட முற்பணக் கணக்குகளின் அதிகாரமளிக்கப்படாத செயற்பாட்டு நுட்பங்களின் வழக்குகள் பரீட்சிப்புகள் நடைபெற்ற அரச கணக்குகள் குழுக்கூட்டத்தில் (COPA) திணைக்கள அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

## 3. 2015 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்

2015 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் 2006 – 2016 பத்து வருட அபிவிருத்தி வேலைச் சட்டகத்திற்குள் உருவாக்கப்பட்டது. முதலாவது ஐந்து வருட அபிவிருத்தி உபாயம் நிறைவடைந்துள்ளது என்ற வகையில், அரசாங்கத்தின் இரண்டாவது ஐந்து வருட அபிவிருத்திக் கொள்கை வேலைச்சட்டகமான 2011 – 2016 ''எழுச்சி பெற்றுவரும் ஆசியாவின் அதிசயம் : மஹிந்த சிந்தனை - எதிர்காலத்திற்கான தூரநோக்கு'' 2011 இலிருந்து செயற்படுத்தப்பட்டது. 2014 வரவு செலவுத் திட்டமானது தலா வருமானத்தினை 4,000 ஐ.அ.டொலர்களுக்கு அதிகமாக அதிகரிப்பதற்கான உபாயத்தினை இலக்காகக் கொண்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டளவில் இலங்கையினை வறுமையிலிருந்து விடுதலை பெற்ற நாடாக மாற்றுவதனையும் இலக்காகக் கொண்டிருந்தது.

### 3.1 வரவுசெலவுத் திட்ட தயாரிப்பு வழிகாட்டல்கள்

2015 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்காக வழமையான வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருபம் விநியோகிக்கப்படவில்லை. தேவையான அனைத்து அறிவுறுத்தல்களையும் உள்ளடக்கியதாக திறைசேரிச் செயலாளரினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட கடிதங்களின் மூலம் 2015 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு வழிகாட்டல்களை வழங்கம் வகையில் தனிப்பட்டவகையில் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன. இக்கடிதங்களில் அனைத்து அறிவுறுத்தல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2014 வரவுசெலவுத் திட்டம் தொடர்பான மீளாய்வினை திணைக்களம் மேற்கொண்டுள்ளதுடன் மிகவும் விரிவான மதிப்பீட்டின் அடிப்படையிலும் அமைச்சு மட்ட சிறந்த வரவுசெலவுத் திட்டத்தினையும் மேற்கொண்டது. 2014 ஆகஸ்ட் நடுப்பகுதியில், ஒவ்வொரு அமைச்சிற்கும் 2014 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகளை திணைக்களம் அனுப்பி வைத்ததுடன் அம்மதிப்பீடுகளை பயன்படுத்துவதற்கான ஊகங்களைச் சுட்டிக் காட்டுகின்ற விபரமான கடிதத்துடனும் அனுப்பப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், திறைசேரி மற்றும் தொடர்புடைய நிரல் அமைச்சுக்கள் என்பவற்றுக்கிடையில் பேச்சுவார்த்தைக்காக 2014 செப்டெம்பர் மாதமளவில் அவர்களது வரைவு மதிப்பீடுகளைச் சமர்ப்பிக்குமாறு அமைச்சுக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

## 4. விசேட செயற்பாடுகள்

### 4.1 வர்த்தகமற்ற அரச தொழில் முயற்சிகளின் வரவுசெலவுத் திட்ட முகாமை

தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களமானது 2013 ஆம் ஆண்டின் போது 122 வர்த்தகமற்ற அரச தொழில் முயற்சிகளின் நியதிச்சட்ட சபைகள், நிதி மற்றும் வரவு செலவுத்திட்ட முகாமை தொடர்பான அனைத்து விடயங்களையும் மேற்கொண்டு வருகின்றது. இந்த நிறுவனங்களின் தொடர்பான பின்வரும் தொழிற்பாடுகளை அவற்றினது நிதி மற்றும் முகாமைத்துவ திறனை மேம்படுத்துவதற்காக 2014 இல் தேசிய வரவுசெலவுத் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

- வருடாந்த வரவு செலவுத்திட்டம், வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், வருடாந்த கணக்குகள் மற்றும் ஆண்டறிக்கை போன்றவற்றினை மதிப்பீடு செய்வதன் மூலம் நியதிச் சட்ட சபைகளின் செயலாற்றுகையினை மீளாய்வு செய்தல்.

- மீண்டெழும் மற்றும் மூலதன மானிய தேவைப்பாடுகள் மீதான மாதாந்த காசுக்கட்டு நிதியினை விடுவிப்பதற்கான வேண்டுகோள்கள் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு பரிசீலனைமற்றும் பரிசீலனை செய்வதுடன் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பித்தலும்.

- 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் நியதிகளுக்கு அமைவாக ரூபா 500,000/- இனை விஞ்சிய மூலதனச் செலவினங்களுக்காக நிதி அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

- அரசாங்க தொழில் முயற்சிகள் குழு (COPE) கூட்டங்கள் கூட்டப்படும் பொழுது நியதிச் சட்டசபைகளின் நிதிச் செயலாற்றுகை மற்றும் முகாமைத்ததுவம் தொடர்பில் அறிக்கையொன்றினை தயாரிப்பதற்கு உதவி செய்தலும்.

- தொழில் முயற்சிகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறு புதிய வாகனங்களின் கொள்வனவுக்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றும் நிதிக்குத்தகை முறைமையின் கீழ் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்து அவற்றினைக் கையளித்தல்.

- இத்திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பரிசீலனை அறிக்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் விசேட கணக்காய்வு வினாக்களையும் பரிசீலனை செய்தல் இந்த வினாக்களைத் தீர்ப்பதில் நியதிச்சட்ட சபைகளுடன் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தல். எதிர்காலத்தில் அவ்வாறான எணக்காய்வு வினாக்கள எழாதிருப்பதற்காக மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளின் கிடைப்பனவு மற்றும் அத்தகைய நிதி நிறுவனங்களின் உண்மையான தேவை தொடர்பில் நியதிச் சட்ட சபைகளின் புதிய பதவியினரை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பில் வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் சிபாரிசுகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல்.

- பல்வேறு நோக்கங்களுக்காக வெள்நாட்டு பயணங்களுக்கு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை வழங்குதல் (பயிற்சி, கூட்டங்கள், செயலமர்வுகள், மாநாடுகள் போன்ற)

- பாரிய மூலதனக் கருத்திட்டங்கள் போன்றவற்றை செயற்படுத்ததல் போன்ற ஏனைய நிதி மற்றும் முகாமைத்துவ விடயங்கள் தொடர்பாக நியதிச்சட்ட சபைகளுக்கு அறிவுரை வழங்குதலும் ஒருங்கிணைத்தல்

### 4.2 அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பான அவதானிப்புக்கள்

2014 ஆம் ஆண்டின் போது கௌரவ நிதி திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்புகளாக 399 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டது.

### 4.3 "தேசத்திற்கு மகுடம்" அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை ஒருங்கிணைத்தல் - 2014

ஆரம்ப கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல், செயற்திட்ட செயற்படுத்துகை பிரதேசங்களை இனம் காணுதல் உரிய பிரதேசங்களில் புதிய மற்றும் இடம்பெற்று வரும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை இனம்காணுதல், அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயாரித்தலும் சமர்ப்பித்தலும் தேசிய தொழிற்பாட்டு குழு மற்றும் கொள்வனவுக் குழு என்பவற்றில் பங்குபற்றுதல் அத்துடன் முழுமொத்த நிதி முகாமைத்துவம் போன்ற விடயங்களில் தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை ஒருங்கிணைப்பதில் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் பங்களிப்புச் செய்துள்ளது.

### 4.4 வாகனங்கள் கொள்வனவுக்கான அங்கீகாரம்

### 4.4.1 வாகனங்கள் கொள்வனவுக்கான தேசிய வரவு செலவுத்திட்ட அங்கீகாரம்

அரசாங்க நிறுவனங்களின் வாகனங்கள் கொள்வனவுக்கான அங்கீகாரத்தினை 1990.01.31 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அகமைவாக, தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் வழங்கியுள்ளது. இதற்கமைவாக, அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளுராட்சி மன்றங்கள் மற்றும் அனைத்து நியதிச்சட்ட சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்க உடமைக் கம்பனிகள் என்பவற்றினால் சுயநிதியின் மூலம் அல்லது வேறு ஏற்பாடுகளின் மூலம் வாகனங்கள் கொள்வனவுக்காக அத்தகைய ஏதேனும் கொள்வனவுக்கான குழுவின் முன் அங்கீகாரம் பெறப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. பல்வேறுபட்ட அரசாங்க முகவராண்மைகளினால் வாகனங்கள் கொள்வனவுக்கான வேண்டுகோள்களை தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் தொடர்ந்து மீளாய்வு செய்வதுடன் அங்கீகாரம் வழங்கியுள்ளது. 2014 ஆம் ஆண்டின்போது இத்திணைக்களமானது 1496 வாகனங்கள் கொள்வவுக்கான அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது.

**அட்டவணை 4.1 தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்கள அங்கீகாரம் வழங்கப்பட்ட வாகனங்கள்**

| வாகனத்தின் வகை | அங்கீகரிக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மோட்டார் கார்கள் | 128 |
| ஜீப் | 45 |
| வான்கள் | 78 |
| பேரூந்துகள் | 10 |
| சிங்கள் / டபள்/குருவ்கப் | 344 |
| முச்சக்கர வண்டி | 86 |
| லொறிகள் / ட்ரக்குகள் | 13 |
| மோட்டார் சைக்கிள்கள் | 366 |
| அம்பியூலன்ஸ்கள் | 22 |
| ஏனையவை (ட்ரக்டர்/ட்ரெயிலர்/தண்ணீர் பவுசர்கள்,போன்றன...) | 404 |
| **மொத்தம்** | **1496** |

*மூலம் : தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களம்*

### 4.4.2 அரசாங்கத்துறைக்கு வாகனங்கள் கொள்வனவு

நிதிக் குத்தகை முறைமையில் அரசாங்க நிறுவனங்களின் பயன்பாட்டுக்காக வாகனங்களின் கொள்வனவு 2010.08.30 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதுடன் அரசாங்கம் பொதுச் செலவினத்தினை வினைத்திறன் மிக்கதாக முகாமை செய்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. வாகனத்தின் செலவினம் 05 வருடங்களுக்கு மேலாகப் பகிரப்படுகின்றது என்ற வகையில் காசுப் பாய்ச்சல் முகாமை செய்யப்படுவதற்காக இம்முறைமை பிரயோகிக்கப்பட்டதுடன் இறுதியில் வாகனம் குறித்த நிறுவனத்திற்கு உரிய ஆதனமாக மாறுகின்றது.

இதற்கமைவாக, தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களமானது அரசாங்க நிறுவனங்களுக்கான வாகனங்களைக் கொள்வனவு செய்து வருவதுடன் அரச வங்கிகளின் குத்தகைக் கம்பனிகளில் இருந்து கேள்வி மனுக்கள் கோரப்படுகின்றன. இதுவரைக்கும் பொதுநலவாய மாநாட்டுக்காகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் உள்ளடங்கலாக 3,916 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. 2014 காலப் பகுதியில் மோட்டார் கார்கள், டபள் கப்கள் உள்ளடங்களாக 324 வாகனங்களை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் விடுவித்துள்ளதுடன், இவ்வாகனங்களுக்காக மாத்திரம் ரூபா 2,327 மில்லியன் செலவிடப்பட்டது. மொத்த குத்தகைச் செலவினத்தில் 2010 – 2014 காலப்பகுதியின் போது ரூபா 5,221 மில்லியன் செலவிடப்பட்டது.

கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட தேவை அடிப்படையிலான மதிப்பீட்டிற்கிணங்க அரசாங்க நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

### 4.5 சபைகளிலும் குழுக்களிலும் பதவியணியினர் பங்குபற்றுதல்கள்

இத்திணைக்களத்தின் பெரும்பாலான பதவிநிலை அலுவலர்கள் நியதிச் சட்டசபைகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்க உடைமை கம்பனிகளின் பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்களாக (திறைசேரி பிரதிநிதிகளாக) பணியாற்றியுள்ளனர். அத்துடன் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திரச் சபைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் உறுப்பினர்களாக திறைசேரி செயலாளர் சார்பாக நியமனம் பெற்றனர். அதற்கு மேலதிகமாக இந்தத்திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் குழு மற்றும் அரசாங்க தொழில் முயற்சிகள் குழு என்பவற்றில் திணைக்களத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பங்குபற்றினர்.

## 5. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பு

தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு மற்றும் அதன் வகிபாகம் நிரல் அமைச்சுக்களின் செலவின மதிப்பீடுகளின் ஏற்பாடுகளை பிரதிநிதித்துப் படுத்தும் பின்வரும் துறைகளின் கீழ் வகுப்பாக்கமொன்று செய்யப்பட்டுள்ளது.

1. அரசாங்க சேவை
2. தேசிய பாதுகாப்பு மற்றும் சட்ட அமுல்படுத்துகை
3. மனித வளங்கள்
4. உட்கட்டமைப்பு
5. நிதி
6. சமூகப் பாதுகாப்பு
7. சுற்றாடல்
8. மெய்ப் பொருளாதாரம்

### 5.1 திணைக்களத்தின் பதவியணி

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 06/2006 ஆம் இலக்க சுற்று நிறுபத்துக்கு அமைவாக 2014 இல் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்புக்குள் பின்வரும் சேவை மட்டங்களின் கீழ் அலுவலர்கள் கடமையாற்றியுள்ளனர்.

| சேவை மட்டம் | அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 36 |
| மூன்றாம் நிலை மட்டம் | 02 |
| இரண்டாம் நிலை மட்டம் | 75 |
| ஆரம்ப மட்டம் | 38 |

2014 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் தற்பொழுது காணப்படும் பதவியணியும் பின்வருமாறு.

### அட்டவணை 5.1 : 2013 ஆம் ஆண்டிற்கான பதவியணி

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உண்மையான பதவியணி |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 06 | 02 |
| பணிப்பாளர் | 12 | 07 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | 16 | 14 |
| கணக்காகாளர் | 01 | 00 |
| நிருவாக அலுவலர் | 01 | 00 |
| மொழிபெயர்ப்பாளர் | 01 | 00 |
| கருத்திட்ட அலுவலர் | 04 | 03 |
| வரவுசெலவுத் திட்ட உதவியாளர் | 38 | 30 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 01 | 04 |
| அபிவிருத்தி உதவியாளர் | 09 | 05 |
| முகாமைத்துவ உதவியாளர் | 23 | 18 |
| சாரதி | 16 | 12 |
| அலுவலக உதவியாளர் | 22 | 14 |
| **மொத்தம்** | **151** | **111** |

## 5.2 மனித வள அபிவிருத்தி

இத் திணைக்களமானது அதன் பதவியணியினர் தமது அலுவலக ஆற்றல்களில் பல்வேறு கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு மேலதிகமாக, அவர்களின் உயர்தொழில் திறமைகள் மற்றும் செயற்றிறன் என்பவற்றினை அதிகரிக்கும் பொருட்டு 2014 ஆம் ஆண்டில் பின்வரும் உள்நாட்டு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அனுப்ப முடியுமாக இருந்தது.

### 5.2.1 வெளிநாட்டு பயிற்சி/கருத்தரங்குகள்/கூட்டங்கள்

### அட்டவணை 5.2

| தொ.இல | அலுவலரின் பெயர் | பததவி | நிகழ்ச்சித் திட்டம் | நாடு | காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | செல்வி.ஜீ.டி.சி. ஏக்கநாயக்க | பணிப்பாளர் நாயகம் | சர்வதேச நாணய நிதி / உலக வங்கி கூட்டம் | வஷிங்டன் | 2014.04.11 - 2014.04.13 |
| | | | இலங்கை முதலீட்டு வியாபார ஊக்குவிப்பு கலந்துரையாடல் | ஸ்டொக்ஹோம் ஸ்வீடன் | 2014.11.27 |
| 02 | செல்வி கே.ஜீ.கே. விமலவீர | மேலதிக பணிப்பாளர் நாயகம் | ESCAP 70 ஆவது அமர்வு – கட்டம் I | பெங்கொக் தாய்லாந்து | 2014.05.23 |
| | | | ESCAP 70 ஆவது அமர்வு – கட்டம் II | பெங்கொக் தாய்லாந்து | 2014.08.04 - 2014.08.08 |
| 10 | திரு.டப்.ஏ.டி.டி.எஸ். விக்கிரமசிங்க | உதவிப் பணிப்பாளர் | ஈ - ஆளுகை மற்றும் மாற்றல் முகாமை பற்றிய பயிற்சி நெறி | சிங்கப்பூர் | 2013.08.19 - 2013.08.23 |

### 5.2.2 உள்நாட்டுப் பயிற்சிகள்

2014 ஆம் ஆண்டில் பின்வரும் பதவி உறுப்பினர்களுக்கு பல்வேறு துறைகளில் உள்நாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

**அட்டவணை 5.3**

| தொ. இல | அலுவலரின் பெயர் | பததவி | நிகழ்ச்சித் திட்டம் | நிறுவனம் | காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | திரு.டப்.ஏ.டி.டி.எஸ் விக்கிரமசிங்க | உதவிப் பணிப்பாளர் | பொருளாதார அபிவிருத்தியில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | கொழும்பு பல்கலைக்கழகம் | 2014.01.01 - 2014.12.31 |
| 02 | செல்வி ஜீ.ஆர். எஸ். திலகரத்ன | உதவிப் பணிப்பாளர் | பொருளாதார அபிவிருத்தியில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | கொழும்பு பல்கலைக்கழகம் | 2014.01.01 - 2014.12.31 |
| 03 | செல்வி எச்.என்.என்.எஸ். சிரிசோம | அபிவிருத்தி அலுவலர் | பொருளாதார பட்டப்பின் படிப்பு | களனி பல்கலைக்கழகம் | 2014 /2015 கல்வி ஆண்டு |
| 04 | செல்வி என்.எம்.ஆர்.விஜே ரத்ன | அபிவிருத்தி அலுவலர் | பொருளாதார பட்டப்பின் படிப்பு | களனி பல்கலைக்கழகம் | 2014 /2015 கல்வி ஆண்டு |

### 5.3. தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் நிதி நிருவாகம்

2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் சாதாரண செயற்பாடுகளுக்கான வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகள் செலவினத் தலைப்பு 240 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் கீழே குறிப்பிடப்பட்டவாறு நிகழ்ச்சித் திட்டம் 2 இன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (அ) | நிகழ்ச்சித்திட்டம் | 01 | - தொழிற்பாட்டுச் செயற்பாடுகள். |
| | நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்டம் | 01 | -வரவு செலவுத் திட்ட உருவாக்கலும் கொள்கையும். |
| (ஆ) | நிகழ்ச்சித்திட்டம் | 02 | - அபிவிருத்தி செயற்பாடுகள். |
| | நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்டம் 02 | 02 | - வரவு செலவுத்திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் நானாவிதப் பொறுப்புக்கள். |

வரவு செலவுத்திட்ட உருவாக்கம் மற்றும் கொள்கைகள் மீதான திணைக்களத்தின் நிருவாகச் செலவினங்களுடன் தொடர்பான ஏற்பாடுகள் கருத்திட்டம் 01 இனால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற அதேவேளை, கருத்திட்டம் 02 ஆனது, பல்வேறு செலவின முகவராண்மைகளினால் தேவைப்படுத்தப்படும். எதிர்பாராத செலவினங்களுக்கும் 2014 வரவு செலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட முன் மொழிவுகளின் செயற்படுத்துகை மற்றும் குறித்த நிதியாண்டிற்காக முன்னுரிமைக் கொள்கைகளாக அறிவிக்கப்பட்டவை என்பன தொடர்பான செலவினங்களுக்கும் வசதியளிப்பதற்கான ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்கின்றது.

2014 ஆம் ஆண்டின் அடிப்படை மதிப்பீடுகளுக்கு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்காக ரூபா 31,362,104,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த மொத்த ஒதுக்கீடானது பின்வரும் வகையில் பயன்படுத்தப்பட்டது:

| | | | |
|---|---|---|---|
| (1) | நிகழ்ச்சித்திட்டம் 1 இன் கருத்திட்டம் 1 செலவினம் | ரூபா | 2,613,129,738 |
| (2) | நிகழ்ச்சித்திட்டம் 2 இன் கருத்திட்டம் 2 பிற செலவினத் தலைப்பு களுக்கான மாற்றல்கள் ஒதுக்கீடுகள் | ரூபா | 28,244,916,995 |
| | **மொத்தம்** | ரூபா | **30,858,046,733** |
| | **நிலுவை ஏற்பாடுகள்** | ரூபா | **504,057,267** |

## 5.3.1 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

**அட்டவணை 5.4 அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு 2014**

| வகை | அனுமதிக்கப்பட்ட எல்லை 2014 (ரூபா) | உண்மை 2014 (ரூபா) |
|---|---|---|
| செலவின உச்ச எல்லை | 5,500,000.00 | 3,556,270.00 |
| கிடைப்பனவு உச்ச எல்லை | 3,500,000.00 | 3,942,470.75 |
| வரவு நிலுவை உச்ச எல்லைகள் | 28,000,000.00 | 18,563,437.76 |
| | | |

*மூலம் : தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்*

2003.12.31 ஆம் திகதி 114 இலக்க, வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், திணைக்கள செலவினத் தலைப்பிற்கு உட்பட முற்பணக் கணக்கு குறியீடு 240 - 011 இன் கீழ் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை மாத்திரமே மேற்படி அட்டவணையிலுள்ள தரவுகள் உள்ளடங்கியுள்ளன. 114 ஆம் இலக்க, சுற்றறிக்கைக்கு ஏற்ப, 2013 ஆம் ஆண்டின் பொது அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு நிலுவைகளை செலுத்தி முடிக்கும் நோக்கில் நிறுவனத்திற்கு உள்ளே மற்றும் வெளியே மாற்றப்பட்டிருந்த முற்பணக் கணக்கு குறியீடு 240 – 012 இன் கீழ் செலவினத் தலைப்புகளுடன் மேற்கொண்ட செலவு ரூபா 3,960,114.50 மற்றும் கிடைப்பனவு ரூபா 5,978,726.00 ஆகும். இதன் பிரகாரம், அரச அலுவலர்களின் அனுமதிக்கப்பட்ட முற்பணக் கணக்கு எல்லைகளுடன் திணைக்களம் உடன்பட்டுள்ளது.

**அட்டவணை 5.5 2014 இல் வழங்கப்பட்ட கடன்கள்**

| கடன்கள்/முற்பணம் | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|
| விழா முற்பணம் | 89 | 441,500 |
| விசேட முற்பணம் | 55 | 137,500 |
| இடர் மற்றும் சைக்கிள் கடன்கள் | 113 | 2,977,270 |
| **மொத்தம்** | **257** | **3,556,270** |

*மூலம் : தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்*

## 5.3.2 2014 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு வினாக்கள்

2014 ஆம் ஆண்டின்போது கணக்காய்வாளர் நாயகத்தின் 07 விசாரணைகள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அனைத்து விசாரணைகளுக்கும் விடையளிக்கப்பட்டன.